★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4} சென்னை: ஆவணி 9௳ வெள்ளி (24–8–56) ★ ★ வெளியீடு: ஆவணி 10௳ சனி (25–8–56) {இதழ் 64

திராவிடர்—ஆரியர் போராட்டம் குறித்து மீண்டும் கவர்னர் பிரகாசா

சென்னை, ஆக. 28—

"சென்னையில், துரதிருஷ்டவசமாக பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் தகராறு இருந்து வருகிறது; இது, ஆரியர் திராவிடர் தகராறாக வளர்ந்துள்ளது. இந்தத் தகராறுக்கு இப்போது, ஒரு நல்ல முடிவுகாண முடியாது போல் தோன்றுகிறது. மேலும் பல இடங்களில் பல சிக்கல்கள் தோன்றியவண்ணமுள்ளன. இது, எதிர்காலத்திற்கு நல்ல அறிகுறியல்ல" என்பதாக சென்னைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் பேசும்போது, கவர்னர் பிரகாசா குறிப்பிட்டிருக்கிறார்.

தென் மண்டலத்திலிருந்து:

மைசூர் பிரிக்கப்பட்ட மர்மம்?

'மைசூர் மேற்கு மண்டலத்தில் இணையக்கூடாது'

'தென்மண்டலத்திலேயே இருக்க வேண்டும்'

மக்கள் சபை உறுப்பினர்கள் விழித்தெழுந்தனர்

புதுடில்லி, ஆக. 23—

மைசூர் மாநிலத்தை அமைக்கப்படவிருக்கும் தென்பிராந்திய மண்டலத்திலேயே இணைக்கவேண்டும் என்றும், மேற்கு மண்டலத்தில் இணைக்கக்கூடாது என்றும், 23 மக்கள் சபை உறுப்பினர்கள் கையொப்பமிட்டு பிரதமர் நேருவிடம் மனு ஒன்றைத் தந்துள்ளனர் என்று தெரியவருகிறது.

மைசூர் முதலில் தென் மண்டலத்தில் சேர்க்கப்பட்டிருந்தது; இரு மொழி பம்பாய் மாநிலம் அமைந்ததும் அரவச் சத்தமில்லாமல், டில்லி சர்க்காரின் திருத்தம் ஒன்றினால் பம்பாயுடன் மைசூர் இணைக்கப்பட்டு மேற்கு மண்டலத்தில் சேர்க்கப்பட்டது என்பதை நினைவு கொள்வது நல்லது.

அப்போது, பம்பாய் சிக்கலில் உழன்றுகொண்டிருந்த மக்கள் சபை உறுப்பினர்கள், இது குறித்துக் கவனிக்க முடியாது போயிற்று; பின்னர், டில்லியின் இந்த வஞ்சனையைப் புரிந்து கொண்ட உறுப்பினர்கள் விழித்துக்கொண்டு, இப்போது பிரதமருக்கு 'மகஜர்' தந்திருக்கின்றனர்.

'காங்கிரசின் இலட்சணம் சிரிப்பாய் சிரிக்கிறது'

'நம்பிய ஏழைகளை காங்கிரஸ் கழுத்தறுக்கிறது-நிலப்பிரபுக்களுக்கே பாதுகாப்புத் தருகிறது'

ஆந்திர சட்டசபையில் முன்னாள் மந்திரி இடித்துரை

கர்நூல், ஆக. 23—

காங்கிரசார் ஏழைப் பங்காளர்களாயிருக்கும் இலட்சணம் ஆந்திர சட்டசபையில் சிரிப்பாய்ச் சிரித்திருக்கிறது.

காங்கிரசின் இன்றைய நிலை குறித்து, முன்னாள் மந்திரியும் இப்போது ஆந்திர சட்டசபையில் உறுப்பினருமான கூர்மையா என்பார் தெளிவான படப்பிடிப்புத் தந்திருக்கிறார்.

"ஆந்திர நிலவார மசோதாவைப் பொறுக்குக் குழு தாக்கல் செய்துள்ளபடி ஆதரிப்பதற்கு எனது மனச்சாட்சி இடம் தரவில்லை' என்று கூறிய கூர்மையா அவர்கள் சட்டசபையில் மேலும் பேசியதாவது:—

"விவசாயத் தொழிலாளர்களான நாங்கள், காங்கிரஸ் எங்களது நலன்களுக்காகப் பாடுபடும் என்று கருதித்தான் காங்கிரசில் சேர்ந்தோம்—காங்கிரசில் இருக்கிறோம்; ஆனால் இந்த மசோதா, நிலப்பிரபுக்களைப் பாதுகாப்பதாகவே உள்ளது; எங்களுக்குத் தெளிவு பிறக்கிறது இந்த மசோதா, வேண்டுமானால் ஒரு நிலப் பிரபுக்களின் சர்க்காரினால் கொண்டுவரப்படாமலிருக்கலாம்; ஆனால் நிச்சயமாக, நிலப்பிரபுக்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட ஒரு சர்க்காரால் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

"இதுபோன்றதொரு சட்டம் முன் கொண்டுவரப்பட்டிருப்பதற்குக் காரணம் சில சந்தர்ப்பவாதிகள் காங்கிரசில் புகுந்துவிட்டதேயாகும். (எதிர்க்கட்சியினர், 'வெட்கம், வெட்கம்' என்று குரல் எழுப்பினர்); இந்த மசோதாவை மக்கள் கருத்தறிவதற்காக அனுப்பி வையுங்கள்."

கூர்மையாவின் கடுந்தாக்குதல் கண்டு கலங்கிப்போன காங்கிரஸ் வட்டாரத்திலிருந்து, வி. வி கிருஷ்ணம் ராஜா என்பார் ஓலமிட்டாராம்.

"எதிர்க்கட்சியினரும் கூர்மையாவும் இந்த வழியில் சென்றால், குடியானவர்களுக்குப் பாதுகாப்புக் கிடைப்பதற்குமாறாக, அழிவுதான் ஏற்படும்" என்று பேசினாராம்!

'நீங்கள் உங்கள் வழிப்படி நடப்பதானால், இந்த மசோதாவில் குறிக்கப்பட்டிருக்கிற காலம் முடிந்தவுடன் நிலப்பிரபுக்கள், தங்கள் நிலத்தில் எந்தக் குடியானவனும் இருக்கமுடியாமல் அடித்துத் துரத்திவிடுவர்" என்று ஓலமிட்டாராம்!

30,000 மாணவர்கள் வேலை நிறுத்தம்

பள்ளிச் சம்பள அதிகரிப்புக்கு எதிர்ப்பு

நாகபுரி, ஆக. 22—

பள்ளிக்கூடச் சம்பளத்தை உயர்த்தியதை ஆட்சேபித்து நாகபுரியில் இன்று சுமார் 30,000 - செகண்டரி பள்ளி மாணவர்கள், ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் செய்துள்ளனர்.

'பள்ளிக் கட்டணத்தை உயர்த்தினாலன்றி ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்க இயலாது' என்று, தனிப்பட்டோர் பள்ளி நிர்வாகிகள் கூறியிருக்கின்றனர்.

'தென்னாடு ஒன்று சேரக் கூடாது' என்ற உள்நோக்கமா?

பண்டித பந்த் காட்டும் பொருந்தாக் காரணங்கள்

எவருடைய கவனத்திலும் படாமலேயே 'திருட்டுத்தனமாக'—சந்தடி ஏதுமின்றி மைசூர் மாநிலத்தை தென்மண்டலத்திலிருந்து பிரித்து மேற்கு மண்டலத்தில் இணைத்த டில்லி சர்க்கார், இப்போது அதற்கு விசித்திரமான காரணங்களைக் காட்ட முன்வந்திருக்கின்றனர்.

'தென்னாட்டு மாநிலங்கள் நான்கும் இன—மொழி—கலைச் சார ஒருமைப்பாடு கொண்டவை—அவை ஒன்றுபட்ட தென்மண்டலம் அமையவிடக்கூடாது' என்ற உள்நோக்கத்துடன் தான் இந்தப் புதிய ஏற்பாடு என்று பல மக்கள் சபை உறுப்பினர்கள் கருதுகின்றனர். மைசூரை மேற்கு மண்டலத்தில் சேர்த்த 'மர்மம்'தான் என்ன?

உள்நாட்டு மந்திரி பந்த், மாநிலங்கள் சபையில் பேசும்போது இது பற்றிக் குறிப்பிட்டதாவது:—

"பழைய பம்பாய் மாநிலத்தின் சில மாவட்டங்களையும் சேர்த்துத்தான் இப்போது புதிய கர்நாடக (மைசூர்) மாநிலம் அமைகிறது; மராட்டிய-கர்நாடக மக்களிடையே ஒருவகை 'கூட்டுறவு' இருந்துவந்திருக்கிறது. மேலும், ஐதராபாத்தின் சில பகுதிகளும் பம்பாயுடன் சேர்கின்றன; அவை கடந்த காலத்தில் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவை; எனவே, இதுவரையில் ஒன்றுபட்டிருந்த மாநிலங்கள் பிரிந்து போவதினால் ஏற்படக்கூடிய நிலைக்கு எதிராகத்தான், மைசூர் மேற்கு மண்டலத்துடன் சேர்க்கப்பட்டது.

"மேலும் சில காரணங்களும் உண்டு. பம்பாய்க்கும்—கர்நாடகத்திற்கு மிடையே பிரதிபேசப் பிரச்சினைகள் சில உண்டு எல்லைத் தகராறுகள் இருக்கின்றன; அவற்றிற்குத் தீர்ப்பு காணுவதற்காகத்தான் அவை இரண்டும் ஒரே மண்டலத்தில் இருக்கவேண்டும் என்ற ஏற்பாடு செய்யப்பட்டது. அன்றியும், பொருளாதாரக் காரணங்களும் உண்டு.

"இந்த ஏற்பாடு ஒன்றும், கட்டாயமானது அல்ல; 'மைசூர், இதர தென் மாநிலங்களுடன் இருப்பதே நல்லது' என்ற அனுபவம் காட்டுமானால், பிற்காலத்தில் அவ்வாறே செய்துகொள்ளலாம்.

"இப்போதைய ஏற்பாடு அமுல் செய்யப்படுவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்கட்டும்; அதன் மூலம், பல முக்கிய பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுவிட்டால், இது குறித்து பின்னர் சிந்திக்கலாம்."

காமராசருக்கு டெல்லி தரும் மதிப்பு

செங்கோட்டை பற்றிய முடிவை மாற்றுவதற்கில்லையாம்!

பண்டிதபந்த் அவமானக் கரியை அப்புகிறார்

"செங்கோட்டையில் பாதியைக் கேரளத்திற்குத் தர ஒப்புக்கொண்டோம்; ஆனால் ஒப்புக்கொண்ட பகுதியைவிட அதிகமாகவே கோட்டை விட்டுவிட்டோம்; அதனைப் பெற்றுத் தாருங்கள், எம்பெருமானே!" என்று, விசேட தூதுவரை விமானம் மூலம் அனுப்பியிருந்தார் காமராசர், டில்லிக்கு!

ஆனால் பாவம், காமராசர்! இவரது மிக மிக அவசரமான கோரிக்கை மனுவை குப்பைத் தொட்டியில் வீசிவிட்டது, டில்லி! காமராசருக்கு டில்லி தரும் மதிப்பே மதிப்பு!

மாநிலங்கள் சபையில் செங்கோட்டை பற்றிப் பேசிய உள்நாட்டு மந்திரி பண்டித பந்த், 'ஏற்கனவே செய்த ஏற்பாட்டை மாற்றுவதற்கில்லை' என்று முகத்தில் அறைந்தாற்போல கூறிவிட்டிருக்கிறார்.

"ஏற்கனவே இரு மாநில சர்க்கார்களும்கூடிச் செய்த முடிவே சிறந்தது; அதை மாற்றுவதற்கில்லை,"

என்று பேசி முடித்து, காமராசர் முகத்தில் அவமானக் கரியை அப்பியிருக்கிறார், பண்டித பந்த்!

புரையோடிய புண்ணுக்கு புனுகுபூசுவதே போதுமாம்!

எல்லைக் குழு அமைக்க மறுப்பதற்கு டெல்லி கூறும் விசித்திர காரணம்

புண்ணை அறுத்து மருந்திட விரும்பவில்லையாம், டில்லி, புனுகு பூசி புரையோடிய நாற்றத்தை மறைத்து விடுவதே போதுமென்று கருதுகிறதாம், டில்லி!

எல்லைக் குழு அமைக்க மறுப்பதற்கு விசித்திரமான—'புண்ணுக்குப் புனுகு பூசுவதேபோதும்' என்பது போன்ற வாதம் ஒன்றை டில்லி கூறியிருக்கிறது!

"எல்லைக் குழு அமைத்தால் ஏராளமான கோரிக்கைகள் எழும்; ஏற்கனவே பிரதேசக் கோரிக்கைகளுக்கான தகராறுகளை ஏராளமாக நாடு கண்டாயிற்று; இரண்டாம் திட்டத்தில் கவனம் செலுத்தவேண்டிய நேரத்தில் மீண்டும் தகராறுகளைக் கிளப்புவது கூடாது. மேலும், மண்டலக் குழுக்கள் எல்லைத் தகராறுகளைக் கவனிக்கலாம் என்று கூறப்பட்டிருப்பதால் அவை, தகராறுகளைத் தீர்த்துவைக்க முடியும் எல்லைத் தகராறுகள் தொடர்புடையவர்களுக்கிடையே மனக்கசப்பு ஏதுமின்றி, மண்டலக் குழுக்களால் தீர்த்து வைக்கப்பட முடியும்,"

என்று பண்டித பந்த், மாநிலங்கள் சபையில் எல்லைக் குழு அமைக்க மறுத்துப்பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தித் திணிப்புக் குழுவின் அறிக்கை

மூடுமந்திரமாக்கப்படும்?

புதுடில்லி, ஆக. 22—

இந்தித் திணிப்புக் குழுவின் அறிக்கையை 'மூடுமந்திர'மாக்கிவிட டில்லி நினைக்கிறதா?

குழுவின் அறிக்கையை, உடனடியாகப் பிரசுரிப்பதா அல்லது மக்கள் சபைக்குழு ஒன்று நியமித்து பரிசீலனை செய்து பின்னர் அதன் சிபாரிசுகளுடன் அதனை வெளியிடுவதா என்பது குறித்து சர்க்கார் ஆலோசித்துக்கொண்டிருப்பதாக மத்திய மந்திரி தத்தார் தெரிவித்திருக்கிறார்.

குழுவின் அறிக்கை சர்க்காரிடம் வந்துவிட்டதாகவும், அது சர்க்காரின் பரிசீலனையிலிருப்பதாகவும் மந்திரி தெரிவித்திருக்கிறார்.

நிரம்பிவிட்டதாம்!

கடந்த நான்காண்டுகளில் முதல் தடவையாக மேட்டூர் அணையின் நீர் மட்டம் அதன் முழு அளவான 120 அடிக்கு நிரம்பியிருந்ததாம்.

தண்ணீர்ப் பஞ்சமின்றி காவேரி பள்ளத்தாக்கில் இருபோக சாகுபடி செய்வதும், மின்சார உற்பத்திக்கு வேண்டிய தண்ணீர் இருப்பதும் இதன் உடனடியான பலனாகும் என்று கூறப்பட்டுள்ளது.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 24—8—'56 வெள்ளி

தமிழர் கோரிக்கை

• இலங்கையிலுள்ள தமிழ்ப் பகுதிகளுக்கு, ஒரு கூட்டாட்சிக்குட்பட்டத் தன்னாட்சி அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என இலங்கை ஐக்கியக் கட்சியினர் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர். இன்றுமுதல் ஓராண்டுக் காலத்திற்குள் அத்தகுத் தன்னாட்சி அதிகாரம் வழங்க, இலங்கை அரசாங்கம் முன்வரவில்லையானால், இலட்சியத்தைப்பெற நேரடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் ஐக்கியக் கட்சி எச்சரித்திருக்கிறது.

இலங்கைத் தமிழர்களை முன்தள்ளி, ஐக்கியக் கட்சியினர் தன்னாட்சி உரிமைகோர என்ன காரணம்? தமிழர்கள் சார்பில் இவ்வாறு கோருவதற்கு முழுதும் பொறுப்பேற்க வேண்டியவர்கள் எவர்?

இலங்கைத் தமிழர்களைத் தாழ்த்தவும், தமிழ்மொழியை ஒழித்துக்கட்டவும் இலங்கை ஆட்சியாளர் மேற்கொண்டு வரும் இனவெறிச் செயல்களே முக்கியக் காரணங்களாகும். வாயளவில் சமதர்ம நாதம் எழுப்பிக் கொண்டு, இருதயத்தில் சிங்களவெறி கொண்டு ஆட்சிபுரிந்துவரும் பண்டாரநாயகாவின் அரசியல் அறிவின்மையே, தமிழர்களின் இம்முனைப்புக்கு முழுதும் பொறுப்பாகும்.

சிங்களம், தமிழ் ஆகிய இருமொழிகளுக்கும் இலங்கைத் தீவில் இதுவரை ஒத்த நிலை அளிக்கப்பட்டிருந்தது. எனவே, மொழியை அடிப்படையாகக் கொண்டு ஒரு மொழியினர் மற்றொரு மொழியினரை வெறுக்கும் நிலையும் அங்கு இடமபெறுது இருந்துவந்தது.

ஆனால், இப்பொழுது பிரதமமந்திரியாக இருக்கும் பண்டாரநாயகா சிங்கள மொழியை மட்டுமே ஆட்சி மொழியாக ஏற்றுக்கொண்டதின் மூலம், தமிழ் மொழியை மெள்ள மெள்ளச் சாகடிக்கத் திட்டமிட்டுவிட்டார். அவருடைய சிங்கள வெறி, மொழி அளவிடன் நின்றுவிடக்கூடியதாகவும் இல்லை; அதற்கு மேலும் சென்று இலங்கைத் தமிழர்களின் நல்வாழ்வைச் சீரழிப்பதற்குரிய செயலில் ஈடுபடுவதாகவும் இருந்துவருகிறது.

பிரதமர் பண்டாரநாயகாவின் சிங்கள வெறியைக் கண்ட இலங்கைத் தமிழர்கள், தங்கள் எதிர்காலம் குறித்து அஞ்சத் தொடங்கிவிட்டனர். அஞ்சுவதுடன் நின்றுவிடாது, தங்கள் எதிர்கால வாழ்வை, சிங்கள வெறிப் போக்கிலிருந்துப் பாதுகாத்துக்கொள்ளவும் துணிந்துவிட்டனர். அதன் எதிரொலிதான், ஐக்கியக் கட்சியின் தன்னாட்சிக் கோரிக்கையாகும்.

இலங்கையின் ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்றி, பண்டாரநாயகாவின் சிங்களவெறிக் கொள்கையை எதிர்காலத்தில் மாற்றி அமைப்பதை விடுத்து தமிழர்கள் தனியாட்சியைக் கோருவது முறையாகுமா என சிலர் எண்ணக்கூடும். அங்குள்ள சிங்களவர்-தமிழ்மக்கள் எண்ணிக்கை அளவு, அந்த முறையை மேற்கொள்ள எவருக்கும் துணிவைக் கொடுக்காது.

இலங்கைத் தமிழர்களின் எண்ணிக்கையைவிட மும்மடங்கு சிங்களவர்கள் அத்தீவில் இருந்து வருகின்றனர். எனவே, அத்தீவின் ஆட்சிப் பொறுப்பு எப்பொழுதும் சிங்களவர்களிடமே இருந்துவரும் என்பது உறுதி. எண்ணிக்கையில் குறைந்துள்ள தமிழ் மக்கள், அங்கு என்றென்றும் ஆட்சிப்பொறுப்புக்கு வரும் சிங்கள வெறியர்களின் கொடுங்கோன்மைக்குப் பலியாகியே தீரவேண்டும்.

தமிழ் மக்களைவிட சிங்கள மக்களின் எண்ணிக்கை கூடுதலாக இருப்பதின் விளைவாக, இலங்கையின் ஆட்சிப் பொறுப்பை கைப்பற்றித் தீமையைத் துடைத்துக்கொள்ளுவது என்பது இலங்கைத் தமிழர்களால் என்றுமே முடியாது. இந்தப் பாதகமான நிலையில், வேறு ஒரு சிறந்த மார்க்கத்தைத் தேடவேண்டிய கட்டாயம் இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்பட்டுவிட்டது. அதன் விளைவுதான் ஐக்கியக் கட்சிக் கோரிக்கையான தமிழர்களின் தன்னாட்சி.

சிங்களவர்களைப் போன்றே தமிழ் மக்களும் இலங்கைத் தீவின் நிரந்தரக் குடிமக்களாவர். இலங்கையின் நிலையான குடிமக்களாகத் தமிழ்மக்களும் இருந்துவருகின்ற காரணத்தினால், பெரும்பான்மை மக்களின் ஒப்புதல் பெற்று அமைக்கப்படும் ஆட்சியினரின் முடிவுகளுக்குத் தமிழர்கள் கட்டுப்பட்டு வாழ வேண்டியதுதான் மக்களாட்சி முறையின் மாண்பாகும் என, பிரதமர் பண்டாரநாயகா பேசத்தான் பேசுவார். இலங்கை மக்கள் சபை ஒன்றைத் தீர்மானித்துவிட்ட பிறகு, அதன் தீர்ப்புக்கு எதிராகக் கிளர்ச்சி செய்வது மக்களாட்சி முறையாகாது என, இலங்கைத் தமிழர்களுக்கு மக்களாட்சிப் பயிற்சி அளிக்க பண்டாரநாயகா முன்வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

குறிப்பிட்ட ஒரு ஆட்சியில், என்றென்றைக்கும் ஓரின மக்கள் சிறுபான்மையினராகவே இருக்கின்ற நிலைமையும் ஆட்சிப்பீடத்தைக் கைப்பற்றும் வாய்ப்பு அவர்களுக்கு என்றும் வாய்க்காது என்ற நிலைமையும் இருந்துவரும் வரையில், அச்சிறுபான்மை மக்கள் தன்னாட்சி கோருவதைத் தவிர, ஆட்சிப்பொறுப்பிலிருக்கும் பெரும்பான்மையினர் இழைக்கும் தீமைகளைத் தடுத்துக் கொள்வதற்குரிய வேறு ஏற்பாடு எதுவுமே கிடையாது. சிறுபான்மை மக்களின் எண்ணிக்கை குறைந்த அளவாக இருக்கும் பட்சத்தில், அவர்கள் தன்னாட்சி கோருவதை விடுத்து வேறு பாதுகாப்பு முறைகளைக் கோர முற்படுவது நியாயமாகும் எனக்கூற இடமுண்டு. சிறுபான்மை மக்கள் நாடு முழுவதும் பரவலாகச் சிதறிக்கிடந்தாலும், தன்னாட்சி உரிமை கோருவதைப் பொருத்தமற்றதெனக் கொள்ளுவதில் நியாயமுண்டு.

இலங்கைத் தமிழ் மக்களின் விவகாரம், மேற்குறித்த இரண்டு வகை சிறுபான்மையினரைப் போன்றதல்ல. குறிப்பிட்டத் தொடர்பான பகுதியில் இலட்சக்கணக்கில் வாழும் மக்களாக இலங்கைத் தமிழ் மக்கள் இருந்து வருகின்றனர். எனவே, தங்கள் மொழி நலனையும் மற்ற நலன்களையும் சிங்கள வெறிச் செயல்களிலிருந்து பாதுகாத்து வளர்த்துக் கொள்வதற்கு, தன்னாட்சி அமைத்துக்கொள்வதைத் தவிர, வேறு சிறந்த வழி, இலங்கைத் தமிழர்களுக்கு இல்லவே இல்லை.

இலங்கைப் பிரதமர் பண்டாரநாயகா சிறந்த அரசியல் யூகம் தெரிந்தவராக இருப்பாரானால், இலங்கைத் தமிழர்களின் தன்னாட்சிக் கோரிக்கையை உடனடியாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அதை ஏற்றுக் கொள்ள மறுத்துப் பிடிவாதம் காட்டிவருவாரானால் இலங்கை ஐக்கியக் கட்சியே, தமிழர்களின் தன்னாட்சியுடன் கூடிய இலங்கைக் கூட்டாட்சி என இன்று கோருவதை விடுத்து, தனிப்பெரும் தமிழர் ஆட்சியைக் கோரும் கட்டத்துக்குச் சென்றுவிடக்கூடும். அந்த நிலை ஏற்படுவதும் ஏற்படாததும் பிரதமர் பண்டாரநாயகாவின் அரசியல் அறிவுடைமையைப் பொறுத்திருக்கிறது.

மாவட்ட எல்லைகள் !

திருத்திஅமைக்கும் பிரச்சினை ஒத்திவைப்பு

ஆந்திர மாநில எல்லைகள் குறித்தப் பிரச்சினைகள் இறுதியாக முடிவு செய்யப்படும்வரையில், மாநிலத்திலுள்ள மாவட்டங்களின் எல்லைகளைத் திருத்தி அமைப்பது குறித்தப் பிரச்சினைகள் அனைத்தும் ஒத்திப்போடப்படும் என்றும், வெகு விரைவிலேயே ஆந்திர மாநிலத்தின் எல்லைகளில் மாற்றங்கள் ஏற்பட இருப்பதால், அதன் பின்னரே மாவட்ட எல்லைகள் நிர்ணயிப்பது நல்லதென்றும் ஆந்திர சட்டசபையில், ரெவினியூ அமைச்சர் சந்திர மௌலி அறிவித்திருக்கிறார்.

மாவட்ட எல்லைகளைத் திருத்தி நிர்ணயிக்கும் பிரச்சினை, விசாகப்பட்டினம், ஸ்ரீகாகுளம், நெல்லூர், சித்தூர், குண்டூர், கர்நூல் ஆகிய மாவட்டங்களைப் பாதிக்கும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

பொய் சொன்னாலும்!

சென்னை, ஆக. 22—

பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேண்டும் என்பார்கள்! ஆனால் சென்னையில் வாய்த்திருக்கும் சர்க்காரோ, பொய் கூடச் சரியாகச் சொல்லத் தெரிந்தவர்களாகக் காணோம்.

அரிசி விலை ஏறும் தடுக்கப்பட்டுவிட்டது என்றொரு பெரும் பொய்யை, சர்க்கார் அதிகாரி ஒருவர் துணிந்து கூறியிருக்கிறார்.

அந்தப் பொய்யை அவர் கூறும் விதமிருக்கிறதே, அதுதான் கவனித்தற்குரியது.

சர்க்கார் தக்க சமயத்தில் அரிசி விலை ஏற்றத்தைத் தடுக்க நடவடிக்கைகள் எடுத்தநாம்! இதன் பலனாக அரிசி விலை ஏற்றம் திறமையான வகையில் தடுக்கப்பட்டிருப்பதாக சர்க்கார் சிவில் சப்ளை இலாகா அதிகாரி ஒருவர் கூறினாராம்.

'வேதநாயகரின் சாதனை தமிழருக்கு ஓர் பொக்கிஷம்'

'அவரது சமரசநெறி பின்பற்றலுக்குரியதாகும்'

வேதநாயகம் விழாவில் என். வி. நடராசன்

சென்னை—இராயபுரம் இலக்கிய மன்றச் சார்பில் நடைபெற்ற வேதநாயகம் நினைவு விழாப் பொதுக்கூட்டத்தில் துணைப்பொதுச் செயலாளர் தோழர் என். வி. நடராசன் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது :—

"வேதநாயகம் தமிழ் காத்தவர்—தமிழர் தலைவர்—தமிழுக்காக அருந்தொண்டாற்றியவர் — தமிழில் முதன் முதலாகப் 'பிரதாப முதலியார் சரித்திரம்' எனும் நவீனம் எழுதி தமிழ் உரை நடைக்கு வழிகாட்டியவர்.

"நாம் தமிழ் காத்தோர்—தமிழ் உணர்வு ஊட்டியோர்—தமிழுக்கென அருந்தொண்டுகள் பல ஆற்றியோர்—தமிழே நமது உயிரென மதித்துத் தமிழுக்காகவே வாழ்வோர்; எனவே, நாம் வேதநாயகனரைப் போற்றுகிறோம் அவரது விழாவில் மகிழ்ச்சியோடு கலந்துகொள்ளுகிறோம். அவரது விழாவில் கலந்துகொள்ளும் உரிமை, வேறு எவரைக்காட்டிலும் நமக்கு நிச்சயமாக உண்டு.

"வேதநாயகத்துக்கு உரிய மதிப்பு தரப்படவில்லை, காரணம், வேதநாயகம் தமிழர் என்பதால் தான்!

"'தமிழ்க் கடல்' எனத்தக்க மறைமலை அடிகளார், 'தமிழ்த் தென்றல்' எனப்பட்ட திரு வி. க ஆகியோர் தமிழுக்கு ஆற்றிய தொண்டு கணக்கிட முடியாதது; அவர்களைப்போல தமிழ்த் தொண்டாற்றியவர்கள் இல்லை என்றே சொல்லலாம்; ஆனால், இவர்களுக்கு வேறு சிலரைப்போல விளம்பரம் இல்லை; வேறு சில வட்டாரங்களில் இவர்கள் மதிக்கப்படுவதில்லை.

"ஆனால், நாம் அப்படியல்ல; தமிழுக்கெனத் தொண்டு செய்தோர் அனைவரையும் பாராட்டுகிறோம்—போற்றுகிறோம் — புகழ்கிறோம். பாரதி போன்ற தமிழ்க் கவிஞர்கள் — அறிஞர்கள்—தமிழ் உணர்வுள்ளோர் பார்ப்பனர்கள் என்ற போதிலும் நாம் பாராட்டத் தவறுவதில்லை. ஏனென்றால், நாம் 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு' என்பதை ஒப்புக்கொள்பவர்கள்.

"பார்ப்பனர்களுக்கு இத்தகைய எண்ணம் இருப்பதில்லை; அவர்கள் பார்ப்பனரல்லாத பெருமக்களை — புலவர்களை-விற்பன்னர்களை போற்றுவதில்லை; பார்ப்பனத் தலைவர்களே மதிக்கப்பட்டு, விளம்பரப்படுத்தப்பட்டு எங்கும் அவர்களைப் பற்றியே பேசும்வண்ணம் எல்லாவற்றையும் அவர்கள் செய்கிறார்கள். காரணம், தமிழரல்லாதாரிடம் அரசியல் — பொருளாதாரம் —பத்திரிகைகள் ஆகியவை இருப்பதுதான். அதே காரணத்தாலே நம்மவர்களுக்கு 'அவர்களை'ப் போல மதிப்பு—விளம்பரம் தரப்படுவதில்லை!

"நாம் கள்ளம் கபடமற்றவர்கள்; நம்மிடத்திலே தூய்மை உண்டு; நல்ல தமிழ் உணர்வு உண்டு; தமிழுக்கென எல்லாவற்றையும் செய்யும் முடிவு உண்டு; நாம் நல்லதொரு சக்தியாக இப்பொழுது உருவாகிக்கொண்டு வருகிறோம். வருங்காலத்தில் இந்தச் சக்தி மகத்தானதாக வளரும். அதன் காரணமாக நமது பண்டையப் பெருமை—புகழ் — மொழி எல்லாம் காப்பாற்றப்படும் என்று நாம் உறுதியாக நம்பலாம்.

"1937-ம் ஆண்டில், தமிழுக்காக தாளமுத்து—நடராசன் இருவரும் உயிர் துறந்தனர், ஆச்சாரியார் ஆட்சியிலிருந்தபோது! அவர்களைப்பற்றிய நினைப்பு மற்றவர்களுக்கு இருப்பதில்லை; அவர்களது மகத்தான தியாகத்தைப் போற்றுவதில்லை; அதற்குக் காரணமாயுள்ள 'துவேஷம்' தெரிய வேண்டும் என்றுதான் நாம் சொல்ல வருகிறோம்.

"மொழிக்காகப் பாடுபட்டோர் எவராயிருந்தாலும் — பாரதியாயிருந்தாலும்—உ. வே. சாமிநாத அய்யராயிருந்தாலும் — மறைமலை அடிகளாயிருந்தாலும்—திரு. வி. க-வாக இருந்தாலும் போற்றப்படவேண்டும்.

"பரிதிமாற்கலைஞர் பார்ப்பனர் என்பதற்காக நாங்கள் தாழ்வாக எண்ணுவதில்லை; உ. வே சாமிநாதய்யரின் தகுதியை நாங்கள் குறைப்பதில்லை; ஆனால் நம்மவர்களைப் பற்றி 'அவர்கள்' அத்தகைய மதிப்பா வைத்திருக்கிறார்கள் ?

"வேதநாயகத்தின் பெருமைகளை, 'இந்து' எழுதியதா? 'சுதேசமித்திரன்' எழுதியதா? மற்றைய பார்ப்பன ஏடுகள் அவருடைய உண்மையான தொண்டு முழுவதையும் எழுதினவா? அவருடைய நினைவு நாளை மைலாப்பூர், தியாகராயநகர் இங்கெல்லாம் இவ்வளவு பிரமாதமாக 'அவர்கள்' கொண்டாடுகிறார்களா? இதற்கு மாறாக, தமிழைப் புறக்கணிப்போரை—தமிழ்க்கொலை செய்வோரை 'தமிழர் தலைவர்' என்று விளம்பரம் செய்கிறார்கள்—அதுவும், 'அவர்களை'ச் சேர்ந்தவர்களாக இருந்தால் மட்டுமே!

"வேதநாயகனரின் சாதனை, உள்ளபடி, நீண்டதொரு நாவலைப் போன்றதாகும்; அவர் தமிழர்களின் பொக்கிஷம்; திரு வி. க. மறைமலை அடிகளார் ஆகியோரைப் போல அவர் தமிழர்களின் வழிகாட்டி!

"வேதநாயகனரின் சமரச நெறி நமது நெறி; அவரது பெருமை நமது மூதாதையர்களின் பெருமை; அவரது தொண்டு நமது முன்னோடிகளின் தொண்டு; அத்தகைய நல்லறிவாளரின் தொண்டு நாடெங்கும் கொண்டாடப்படவேண்டும்; அவரைப்பற்றி மக்களுக்கெல்லாம் விளக்குவது நமது கடமையாகும்.

"தமிழர்களுக்கு மொழி உணர்வு இல்லை; வங்காளியைப்போல—குசராத்தியைப் போல — மராட்டியனைப் போல-பஞ்சாபியைப் போல — உலகத்தின் மற்ற எல்லா மொழிக்காரர்களையும்போல நமக்கு மொழி உணர்வு இருக்கிறதா? இல்லை.

'வேதநாயகம் போன்றவர்களின் விழாக்களுக்குக் கவர்னர் போன்ற ஆட்சித் தலைவர்கள் வரவேண்டும்; அமைச்சர்கள்வரவேண்டும். ஆனால் கவர்னர் இப்படிப்பட்ட விழாக்களையெல்லாம் விட்டுவிட்டு இராமாயண காலட்சேபத்தில் சுண்டல் வழங்கச் சென்றிருக்கிறார்; இதுதான் ஒரு கவர்னரின் வேலையா? கவர்னர்தான் இல்லை—காமராசராவது இத்தகு விழாக்களுக்கு வருகிறாரா? மற்ற அமைச்சர்கள் தான் வருகிறார்களா? அவர்கள் வரவால் விழா சிறப்படையும் என்பதற்கல்ல — இத்தகு விழாக்களுக்கு வந்தால் அவர்களுக்காவது தமிழ் உணர்வு வரும் என்பதற்காகவே, அவர்கள் வரவேண்டும் என்கிறேன்.

"வேதநாயகம் 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்றவர்; அன்பையும் அறிவையும் மதித்தவர்; மனிதன் வாழும்வகை அனைத்தையும் சொல்லிச்சென்றவர்.

"'கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப்போக' என்ற இராமலிங்க அடிகளும், சித்தரும், திருமூலரும், மற்றைய பெரியோர்களும் வேதநாயகர் சொன்னதையே சொல்லிச் சென்றார்கள்.

"வேதநாயகர் விழாவும், நினைவுகளும் நமக்கெல்லாம் நல்ல வழிகாட்டி நம்மை நமது இலட்சியத்துக்கு—தமிழ்த் தொண்டுக்கு அழைத்துச் செல்லும் என்று உறுதி கூறுகிறேன்."

சாதுக்களிடம் சர்க்கார் அதிகாரிகள் உறுதிமொழி

இலஞ்சம் வாங்குவதில்லை எனக் கூறியுள்ளனராம்

நாகபுரி, ஆக. 21—

மத்திய-மாநில சர்க்கார்களைச் சேர்ந்த 400 அதிகாரிகள் தாங்கள் இலஞ்சம் வாங்குவதில்லை என்றும், இதரர் இலஞ்சம் வாங்குவதை ஊக்குவிப்பதில்லை என்றும் பாரத் சேவக் சமாஜத்திடம் உறுதிமொழியளித்திருப்பதாக சமாஜத் தலைவர் துக்கோஜி மகராஜ் என்பார் தெரிவித்திருக்கிறார்.

'சாது சமாஜம் தேர்தலில் நிற்காது என்பது மட்டுமின்றி, தேர்தல் வேலைக்கும் பயன்படுத்தப்படமாட்டாது' என்றும் அவர் தெரிவித்திருக்கிறாராம்.

அல்ஜீரியாவில் பயங்கர மோதல்

90 பேர் சுட்டு வீழ்த்தப்பட்டனர்

அல்ஜியர்ஸ், ஆக. 21—

பிரெஞ்சுத் துருப்புகள்—முஸ்லிம் ஆர்ப்பாட்டக்காரர்கள் இடையே நடைபெற்ற பலத்த மோதலின்போது, பிரெஞ்சுத் துருப்புகள் 90 ஆர்ப்பாட்டக்காரர்களைச் சுட்டு வீழ்த்தியிருக்கின்றனர்.

கான்ஸ்டன்டைனுக்குத் தென் கிழக்குப் பகுதியில் 150 பிரெஞ்சுத் தேசியப் படையினர்மீது அந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் பல மணி நேரமாகத் திடீர் தாக்குதல் நடத்தினார்கள் என்றும், இறுதியில் 32 ஆர்ப்பாட்டக்காரர்கள் கொல்லப்பட்டனர் என்றும் கூறப்படுகிறது.

கடந்த வாரத்தில் போஸ்கீன் எனுமிடத்தில் 20 பிரெஞ்சுக்காரர்கள் கொல்லப்பட்டனர் என்றும், அதற்குப் பழிவாங்கும் வகையில் பிரெஞ்சுத் துருப்புகள் 18 ஆர்ப்பாட்டக்காரர்களின் உயிர்களைப் பலிகொண்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாவட்ட தி. மு. க. மாநில மாணவர் கிளை குழுக் கூட்டம்

நிறைவேறிய தீர்மானங்கள் விவரம்

21—8—56 காலை 10 மணிக்கு சென்னை—இராயபுரம், 'அறிவக'த்தில், சென்னை மாவட்ட தி மு. க. மாநில மாணவர் கிளை குழுக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்குத் தோழர்கள் பொன்னுவேலு, தில்லை-வில்லாளன், கே. ஏ. கிருஷ்ணசாமி, சுப. தியாகராசன், எஸ் ஆர். பாலசுப்பிரமணி, முத்துசாமி, திருவேங்கடம், கணேசன், அடைக்கலம், பி. எஸ். மணியம், எஸ். பாண்டியன், உ. பில்லப்பன், சம்பத், பி. டி. ஆதிமூலம், மைனர்மோசஸ், ஜகந்நாதன், மகமதுபாசா, கருணாகரன், வைத்தியநாதன், கணேசன் ஆகியோர் வந்திருந்தனர்.

பலத்த விவாதத்திற்கு, பிறகு கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன :—

1. 5—8—56 தேர்தல் நிதிக் கூட்ட வரவு-செலவு கணக்கு பரிசீலிக்கப்பட்டு, கூட்டம் ஏற்றுக் கொள்ளுகின்றது; வரவு: ரூ 1929; செலவு: ரூ. 295—3—0; தேர்தல் நிதிக்காகக் கொடுத்தது ரூ. 1,000; ஆக மீதி ரூ 633—13—0ஐ தி.மு. கழக—மாநில மாணவர் கிளையின் நிதிக்காக சேர்ப்பது என இக்குழு முடிவு செய்கின்றது.

2. எகிப்து தனக்கு உரிமையான—ஆனால் இது நாள்வரையில் பிரிட்டிஷாரின் ஆதிக்கத்தில் இருந்த சூயஸ் கால்வாயை தேசியமயமாக்கிய செயலை சென்னை மாவட்ட தி. மு. க.—மாநில மாணவர் கிளை மகிழ்ச்சியோடு வரவேற்பதுடன், இந்த நிகழ்ச்சியைப் பயன்படுத்தி, எகிப்தை உலகப் போரின் ஆரம்ப தளமாக்க முயலும் மேற்கத்திய வல்லரசுகளின் தவறான போக்கினை வன்மையாகக் கண்டிக்கின்றது.

3 மொழி வழி மாநிலங்கள் அமைப்பது என்ற திட்ட வட்டமாக அறிவித்த பிறகு, மாநிலப் புனரமைப்பு என்ற பேரால், பல மொழி மாநிலங்களை உருவாக்கியிருக்கும் மத்திய சர்க்காரின் போக்கினைக் கண்டிக்கின்றது.

(அ) பல மொழி மாநில அமைப்பை எதிர்த்துப் போராடும் குஜராத் முயற்சியினைப் பாராட்டி, உயிர் நீத்த அகமதாபாத், பம்பாய் வீரர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கிறது.

4. சிங்கள மொழியினை இலங்கையின் அரசாங்க மொழியாக்கி, தமிழின் நிலையைத் தாழ்த்தி தமிழருக்கு அநீதி இழைக்கும் இலங்கை ஆட்சியாளரின் போக்கை வன்மையாகக் கண்டிக்கிறது.

5. இந்தியத் துணைக்கண்டத்தில் சரியான எதிர்க்கட்சி இல்லாததால் முறையான ஜனநாயகம் வளராதது கண்டு வருந்துவதுடன் இதற்குப் பரிகாரமாக, வரும் பொதுத் தேர்தலின் போதாவது, இந்தியத் துணைக்கண்டம் முழுவதும்—குறிப்பாகத் தமிழ் நாடுவரையாவது ஆளும் கட்சியை எதிர்க்கும் முற்போக்குக் கட்சிகள் அனைத்தும் சேர்ந்து ஒரு தோழமை உணர்ச்சியுடன் எதிர்த்துப் போராடவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறது.

6. கல்வி நிலையங்களில் மத போதனைக்காக வகுப்பு நடத்த வேண்டும் என தமிழ் நாட்டில் நடக்கும் முயற்சி, எதிர்கால வளர்ச்சியைப் பாழ்படுத்தும் என்பதால், மதச் சார்பற்ற அரசாங்கம் எனக் கூறும் இந்த அரசாங்கம், இதற்கான முயற்சிகளில் ஆக்கம் காட்டக் கூடாது என்று வற்புறுத்துகின்றது.

7. தி. மு. கழக மாநில மாணவர் கிளையின் அடுத்த அமைப்புக் குழுக் கூட்டத்தை அக்டோபர் மாதத்தில் சென்னையில கூட்டும்படி, அமைப்பாளரை இக்குழு கேட்டுக்கொள்ளுகின்றது.

துரத்தப்படுவோருக்கு குடியிருப்பு வசதி!

புதுடில்லி, ஆக 22—

டில்லி நகரின் சேரிகளிலிருந்து துரத்தப்படுகிற ஏழை எளிய மக்களுக்கு, அவர்கள் வேலை செய்யும் இடங்களுக்கு அருகாமையிலேயே குடியிருப்பு வசதி செய்து கொடுக்கப்படுமென மக்கள் சபையில் மந்திரிகள் இருவர் உறுதி கூறியிருக்கின்றனர்.

'வெள்ளை யோகி'யின் 65நாள் உண்ணாவிரதம்

'முள் படுக்கை'யை ஆசனமாகக் கொள்வாராம்

44 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து வெற்றி கண்ட வெள்ளைக்காரர் ஒருவர், இப்போது 65 நாட்கள் உண்ணாவிரதமிருக்கப் போவதாக அறிவித்து, விரதம் தொடங்கியுள்ளாராம்.

31 வயதான மைக்கேல் காஸ்டெல்லோ என்ற அந்த ஐரிஷ்காரர், 44 நாட்களாக கண்ணாடிப் பெட்டி ஒன்றில் உண்ணாவிரதமிருந்துவிட்டு நேற்றுத் தான் வெளிவந்தார்.

டாக்டர்களின் பரிசோதனைக்குப் பிறகு அவர் இப்போது மீண்டும் 65 நாள் உண்ணாவிரதம் ஒன்றைத் துவங்கினாராம். இம்முறை அவர், இரும்பு ஆணிகள் அடித்த 'முள் படுக்கை'யில் இருந்து கொண்டு, உண்ணாவிரதம் இருப்பாராம்.

இவர் தன்னை 'பினாண்டின்'—'வெள்ளை யோகி என்று கூறிக்கொள்கிறாராம்.

குடும்பக் கட்டுப்பாடு நிபுணர்கள்

'மணமானவர்களா? குழந்தைகள் எத்தனை?'—எனக் கேள்வி

புதுடில்லி, ஆக. 20—

"இந்தியாவுக்கு வரவழைக்கப்பட்ட இரு குடும்பக் கட்டுப்பாடு நிபுணர்கள், உண்மையிலேயே அத்துறையில் நிபுணர்கள்தான் என்பதை உறுதியாக நம்புவதற்கு அவர்கள் மணமானவர்களா இல்லையா? அவர்களுக்குக் குழந்தைகள் எத்தனை?" என்று, மாநிலங்கள் சபையில் உறுப்பினரொருவர் கேள்வி எழுப்பினார்.

கேள்விக்கு அமைச்சரிடமிருந்து பதிலேதும் கிடைக்கவில்லை; ஆகவே சபைத் தலைவர், 'பட்டியலிலுள்ள அடுத்த கேள்வியைப் பற்றி ஆலோசிப்போம்' என்று கூறியுள்ளார்.

கேள்விக்கு அமைச்சர் பதில் தரவேண்டுமென்று உறுப்பினர் வற்புறுத்தியதுடன், 'அவர்கள் நிபுணர்'கள் என்று நீங்கள் எப்படிச் சொல்லுகிறீர்கள்?' என்றும் அவர் கேட்டுள்ளார்.

'சரி, சரி; அடுத்த விஷயத்தைப் பார்ப்போம்' என்று சிரித்துக் கொண்டே சபைத் தலைவர் கூறிவிட்டாராம்.

ரூ. இரண்டு கோடி செலவில்!

சென்னை சென்ட்ரல் இரயில்வே நிலையம் புதுப்பிக்கப்படுமாம்

புதுடில்லி, ஆக. 21—

சென்னை சென்ட்ரல் இரயில்வே நிலையத்தை ரூ. 2 கோடி 7 இலட்சம் செலவில் புது மாதிரியாகக் கட்டி முடிப்பதெனத் திட்டமிடப்பட்டிருக்கிறதாம்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், தென்னிந்திய இரயில்வேயில் ஏற்படக்கூடிய அதிகப் போக்குவரத்துக்கள், சாமான்கள் போக்குவரத்துக்கள் ஆகியவற்றுக்கு வசதிகள் செய்து தரும் வகையில், முக்கிய இரயில் பாதைகளில் மேலும் 41 புதிய இரயில் 'கிராசிங்' நிலையங்கள் ஏற்படுத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளதாம்.

குண்டக்கல், ஜோலார்பேட்டை, மதுரை, கடாக்; ஈரோடு உள்ளிட்ட பல இரயில்வே நிலையங்களும் புது மாதிரியில் கட்டப்பட்டு வருகின்றனவாம்.

'பிராட்கேஜ்' பிரிவில், இராசமந்திரி, விஜயவாடா நிலையங்களைப் புதுப்பிக்கும் முக்கிய இரு வேலைகள் அபிவிருத்தி நிலையை எய்தவே அடைந்துள்ளனவாம்.

தென்பிராந்திய இரயில்வேயில், கடந்த பல்லாண்டுகளுக்கு முன்னர், சிறு சிறு போக்குவரத்துக்களின் வசதிகளுக்காகக் கட்டப்பட்ட பல சாமான் கிடங்குகள், பார்சல் அலுவலகங்கள் ஆகியவையெல்லாம்கூட பெரிய அளவு போக்குவரத்துக்களுக்கும் வசதியாக இருக்கும் வகையில் விரிவுபடுத்தப்படும் என்றும் கூறப்படுகிறது.

அண்ணா

நிகழ்ச்சிகள்

★

ஆகஸ்டு

25 : சென்னை-சேத்துப்பட்டு

26 : ,, புளியந்தோப்பு

27 : ,, தேனாம்பேட்டை

சிங்கையில் நடிப்பு-இசைப் புலவர் இராமசாமி குழு

வெற்றிகரமான நாடகக் கலைப்பணி

சிங்கை, ஆக. 20—

ஆக. 4, 5-ந் தேதிகளில் சிங்கப்பூர் ஸ்டேடியத்தில், 'வேலைக்காரி' நாடகங்கள் நடைபெற்றன.

இரு நாடகங்களிலும் 35,000 வெள்ளிகள் வசூலாயிற்று—(ஒரு வெள்ளியின் மதிப்பு ரூ. 1—8—0)

பிறகு ஒரு வாரம் நாடகம் இல்லை.

ஆக. 12-ந்தேதி முதல் 15-ந் தேதிவரை நான்கு நாட்கள் கோலாலம்பூர் ஸ்டேடியத்தில் 'வேலைக்காரி' நாடகம் நடைபெற்றது.

கோலாலம்பூர் நாடகம் ஒன்றுக்கு 15,000 வெள்ளிகளுக்குக் குறையாமல் வசூலாயிற்று.

பாதிக்கப்பட்ட தமிழர் சிங்களவர் உறவை சரிசெய்வதற்குரிய வழி என்ன?

'ஈழகேசரி' ஆசிரியர் விளக்கம்

சென்னை, ஆக. 21—

"சிங்கள மொழியைப் போன்றே தமிழ் மொழிக்கும் சமநிலை தந்து இலங்கையின் ஆட்சி மொழிகளுள் ஒன்றாகத் தமிழ் மொழியையும் ஏற்றுக்கொள்வதுதான், தமிழர்—சிங்களவரின் பாதிக்கப்பட்ட உறவை சரி செய்வதற்கான ஒரே வழியாகும்" என்று, 'ஈழகேசரி' ஆசிரியர் இராச-அரியரத்தினம் அவர்கள் கூறியிருக்கிறார்.

இலங்கையில் வாழும் தமிழர்கள் இப்போது, அங்கு தங்கள் தாய் மொழியிலேயே கல்வி கற்பதற்குக் கூட அனுமதிக்கப்படவில்லை என்றும், அங்குள்ள தமிழர்கள் தங்கள் நியாயமான உரிமைகளைப் பெறுவதற்காக சத்தியாக்கிரகம் செய்ய முடிவு செய்திருக்கின்றனர் என்றும், இலங்கைத் தமிழரின் இந்த சிக்கலான பிரச்சினையில் தமிழ் நாட்டுத் தலைவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒத்துழைப்பு நல்க வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

தமிழ்ப் பேராசிரியருக்கு புது பதவி

பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன் அவர்கள் அகில இந்திய சென்னை வானொலி நிலையத்தில் நாடகத் தயாரிப்பாளராகப் பதவி ஏற்றிருக்கிறார்.

அவர் இயற்றியுள்ள 'இலக்கியக் கலை' நூலுக்கு சென்னை சர்க்கார் 1952-53-ம் ஆண்டின் மிகச்சிறந்த ஆராய்ச்சி நூலுக்கான பரிசை அளித்தார்கள்.

திரு ஞானசம்பந்தன் அவர்கள் மலேயாவிலும் சிங்கப்பூரிலும் சொற்பொழிவுகள் நிகழ்த்துவதற்காகச் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு அண்மையில்தான் இந்தியாவுக்குத் திரும்பினார்; மலேயா இந்தியக் காங்கிரசின் அழைப்பின் மீது அவர் அங்கே சென்றிருந்தார்.

'மைசூர் தென்னாட்டைச் சேர்ந்ததே'

'மேற்கு மண்டலத்துடன் இணைக்கப்படுவது நியாயம் அல்ல'

புதுடில்லி, ஆக. 22—

மண்டலக் குழுக்கள் அமைக்கும்போது மைசூர் மாநிலத்தைத் தென் பிராந்திய மண்டலத்தில் சேர்க்காமல் மேற்கு மண்டலத்தில் சேர்ப்பதற்கு, மாநிலங்கள் சபையில் பலத்த கண்டனம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

"தென்னாடு முழுவதற்குமாக ஒரு மண்டலக் குழு அமைக்கப்பட்டிருக்க வேண்டும்; அல்லது ஆந்திராவையும் இணைத்தேனும் ஒரு மண்டலக் குழு அமைத்திருக்க வேண்டும்; அதுவே நியாயமானதாகும்," என்று, மாநில புது அமைப்புக் குழுவில் உறுப்பினராயிருந்த எச். என். குன்சுரு தெரிவித்திருக்கிறார்.

"பம்பாயுடன் கொண்டுள்ள தொடர்பைவிட, மைசூர் மாநிலம், சென்னை — ஆந்திர — கேரள மாநிலங்களுடன்தான் அதிகமான தொடர்பு கொண்டதாகும்; எனவே, மைசூர் தென் மண்டலத்தில்தான் இருக்க வேண்டும்," என்று, டாக்டர் சுப்பராயன் வலியுறுத்தியிருக்கிறார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமை நிலையச் செய்தி :

மத்திய செயற்குழு

(Working Committee)

★

9—9—56 ஞாயிறு காலை 9-மணிக்கு, சென்னை—இராயபுரம் 'அறிவக'த்தில், தி. மு. கழக மத்திய செயற்குழுக் கூட்டம் நடைபெறும்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

துணைப் பொதுச்செயலாளர்

என். வி. நடராசன்

நிகழ்ச்சிகள் :

★

ஆக. 25 : சென்னை—சேத்துப்பட்டு

26 : காலை-திருக்கழுக்குன்றம்
பிற்பகல்-காஞ்சிபுரம்

27 : தேனாம்பேட்டை

29 : சென்னை பல் தொழிலாளர் சங்கபொதுக் கூட்டம்

இலங்கை தி. மு. க. கொழும்பு கிளை 7-வது ஆண்டு நிறைவு விழா

26—8—56 காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை, இலங்கை திராவிட முன்னேற்றக் கழகக் கொழும்பு கிளையின் 7-வது ஆண்டு நிறைவு விழா சாகிரா கல்லூரி 'வள்ளுவர் அரங்கில், இயல், இசை, நடனத்துடன் நடைபெறும்.

விழாவிற்குத் தோழர் பி எஸ் ஏ. கனி தலைமை வகிப்பார்.

தோழர் மு வே. பெ சாமி கொடி யேற்றுவார்.

காலை 9 மணிக்கு நம்புதாளை தோழர் ஏ. எச். எம் முகையதீன் குழுவினரின் இன்னிசை நடைபெறும்.

திரு சி. வன்னியசிங்கம் எம். பி, ஏ. அமிர்லிங்கம் எம். பி., செ. கருணாநிதி, சுந்தரராசன், மு. க. இராசன், அ. கார்வண்ணன், க. ஆறுமுகம் ஆகியோர் பல தலைப்புகளில் சொற்பொழி வாற்றுவர்.

மாலை 2-45 மணிக்கு, தோழர்கள் 'நல்லிசைச் செல்வன்' என் எம். நூர்தீன், நம்புதாளை ஏ. எச் எம் முகையதீன் குழுவின ரின் இன்னிசை நடைபெறும்.

மாலை 4 மணிக்குத் தலைவர் உரை யும், பின்னர் தோழர்கள் எஸ். இராசதுரை எம். பி, ஏ. அமிர்த லிங்கம் எம் பி., ஜே. சோம சுந்தரம், பி. எம். ஜலால், ஏ. எஸ். மணவைத்தம்பி, எம். முக் தார், வி. எஸ். முருகன், இரா. அதி. மணி, டி. எம். பீர்முகமது ஆகியோரின் சொற்பொழிவு நிகழ்ச்சியும் நடைபெறும்.

அன்று காலை 9 மணிக்கு திரு. சி. வன்னியசிங்கம் அவர்களுக்கு வரவேற்பும் வழங்கப்படும்.

மதுரைநகர் தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம்

26—8—56 காலை 10 மணிக்கு, மதுரை நகர் தி. மு. கழகக் கட்டிடத்தில், கழகச் செயற் குழுக் கூட்டம் நடைபெறும். செயற்குழு உறுப்பினர்களும் கழக அமைப்பில் உள்ள படிப்பகச் செயலாளர்களும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மாதவரம் துணைவட்ட தி. மு. கழக அவசர செயற் குழு

25-8-56 இரவு 7 மணிக்கு, கொடுங்கையூர் தி. மு கழகப் பணி மனையில், பிரச்சார அவசர செயற் குழுக் கூட்டம் நடைபெறும்.

சொற்பயிற்சிக் கூட்டம்

24—8—56 மாலை 6½ மணிக்கு, சென்னை 3-வது வட்ட கழகப் பணிமனையில் (எண் 32, எம். சி. ரோடு), தோழர் செ இளந்தமிழன் தலைமையில், 'திராவிடமும் - ஆரிய மும்' எனும் தலைப்பில் தோழர் கள் பலர் பேசுவர்.

* * *

25—8—56 மாலை 6-30 மணி யளவில், சென்னை—முத்தியால் பேட்டை எண் 17, சாலைவிநாயகர் கோவில் தெரு, முத்தமிழ் மன்றப் பணிமனையில், தோழர் சு இரத்தி னம் தலைமையில் சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெறும்.

சென்னை-கோமளீசுவரன்பேட்டை முற்போக்குக் கழகம்

25—8—56 மாலை 6½ மணிக்கு. சென்னை ஆரிஸ் ரோட், எண் 68 இல்லத்தில், 'இளமை நிலையாமை' எனும் தலைப்பில் திரு ஆர். சண்முகசுந்தரம் சொற்பொழி வாற்றுவார்.

செங்கற்பட்டு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் கூட்டம்

'26—8—56 பகல் 2-மணி யளவில், காஞ்சீபுரம் 'திராவிட நாடு' அலுவலகத்தில், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் தலைமை யில், செ. மா. தி. மு. க. உறுப்பினர் கூட்டம் நடை பெறும்.

அதுபோது, மாவட்டச் செயலா ளர் இராஜினாமா-புதுச்செயலா ளர் தேர்தல் ஆகியவை ஆய் வுக்கு வரும்"

என்று, செ மா. தி மு. கழகத் துணைச்செயலாளர் தோழர் வகாப் அவர்கள் அறிவிக்கிறார்

சென்னை வானொலியில் கண்ணதாசன்

25—8—56 சனி இரவு 7-30 மணிக்கு 'தேசிய ஒற்றுமைக் காக இலக்கியம்' என்ற தலைப் பில், தோழர் கண்ணதாசன் அவர்கள் பேசுவார்.

சென்னை தாய்மார் கழகம்

25—8—56 பிற்பகல் 2-30 மணிக்கு சென்னை—பெத்துநாய்க் கன்பேட்டைத் தாய்மார் கழகச் சார்பில், சென்னை-1, முத்துக் கிருஷ்ணன் தெரு, எண் 15 இல் லத்தில், பேராசிரியர் மயிலை-சிவ. முத்து அவர்கள், திருக்குறளில், 'இடுக்கணழியாமை' எனும் அதி காரத்தைத் தொடர்ந்து சொற் பொழிவாற்றுவார்.

தமிழ்நாடு வர்த்தகக் கழகம்

பல கட்ட முறை விற்பனை வரி எதிர்ப்பு 3-வது மாநில மாநாடு

★

26—8—56 ஞாயிறன்று சென்னை எஸ். ஐ. ஏ. ஏ. மைதா னத்தில் (மூர் மார்க்கெட் பின்புறம்) அமைக்கப்பெற் றுள்ள வ. உ. சிதம்பரம் பிள்ளை திடலில் நடைபெறும்

தேசியக் கொடி ஏற்றுபவர் :
சென்னை மேயர் உயர்திரு V. R. ராமநாத ஐயர் அவர்கள்

வர்த்தக சின்னமான கப்பற்கொடி ஏற்றுபவர் :
திருச்சி உயர்திரு கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள்

மாநாட்டுத் திறப்பாளர் :
உயர்திரு S. அனந்தராம கிருஷ்ணன் அவர்கள்
(சிம்சன் கம்பெனி)

தலைவர் :
விருதுநகர் உயர்திரு வி. வி. ஷண்முகநாடார் அவர்கள்

சொற்பொழிவாளர்கள் :
உயர்திரு V. V. இராமசாமி அவர்கள் M. L. C.
உயர்திரு கேசவலால் காளிதாஸ் சேட் அவர்கள்
ஜனாப் யூசுப் பேய்ஸ் அவர்கள், செயலர்—S. I. A. A.

குறிப்பு :—25—8—56 மாலை 4-மணிக்கு விஷயாலோசனைக் குழுவின் கூட்டம் நடைபெறும். 26—8—56-ல் அன்பர்கள் மாநில முழுதும் கடை அடைப்பு செய்து மாநாட்டு நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வேண்டுகிறோம்.

M. அங்காளப்ப செட்டியார்
வரவேற்புக்குழுத் தலைவர்

K. கிருஷ்ணமூர்த்தி,
M. P. S. ரத்தினசாமி நாடார்,
பொதுசெயலாளர்கள்

கழகக் கூட்டம்

☆

சென்னை — சேத்துப்பட்டு செகநாதபுரம் :
இரயிலடிக்கு அருகில்
(டி. பி மருத்துவமனைக்கு பின்புறம்)
25—8—56 மாலை 6 மணிக்கு
தலைவர்: வ. சங்கரநாராயணன்
பேசுவோர் :
அண்ணா
என். வி. நடராசன்

★

இலுப்பூர் :
சின்னக்கடை வீதியில்
தி. மு. கழகத் துவக்க விழா
4—9—56 மாலை 6 மணிக்கு
தலைவர்: எல். எஸ். எல். மணன்
பேசுவோர் :
இரா. நெடுஞ்செழியன்
அம்பில் தர்மலிங்கம்
எம். எஸ். மணி
எஸ். எ ஜி. ராபி

☆

மாயூரம் :
26—8—56 மாலை 6 மணிக்கு
நகரப் பூங்கா
தலைவர்: வி. சங்கையன்
பேசுபவர்: ஈ. வெ. கி. சம்பத்
[குறிப்பு :—காலை 9-மணிக்கு, முசாபரி பங்களா அருகில் நடை பெறும் தில்லையாடி வள்ளி யம்மை படிப்பக முதலாவது ஆண்டு விழாவிலும் தோழர் ஈ. வெ. கி. சம்பத் கலந்து கொள்வார்]

☆

தஞ்சை :
திலகர் திடலில்
26—8—56 மாலை 6 மணிக்கு
தலைவர்: ப. விசயம்
பேசுபவர்: மு. கருணாநிதி

☆

மணப்பாறை :
26—8—56 மாலை 6 மணிக்கு
தலைவர்: மா. இளங்கீரன்
பேசுபவர்: இரா. சு. தங்கப்பழம்

★

உதகை :
போஸ் மைதானம்
26-8-56 பிற்பகல் 2 மணிக்கு
பேசுபவர்: ப. உ. சண்முகம்

★

தூத்துக்குடி :
சந்தன மாரியம்மன் கோவில் மைதானம்
26—8—56 இரவு 7 மணிக்கு
தலைவர்: சண்முகசுந்தரம்
பேசுவோர் :
எம். எஸ். இராமசாமி
டி. துரைசாமி

☆

பாலையக்கோட்டை :
அழகிரி திடலில்
26—8—56 மாலை 6 மணிக்கு
தலைவர்: இரா. அரசமாணிக்கன்
பேசுவோர்:
ந. தருமலிங்கம்
இரா. நடராசன்
பி. பெத்தக்கண்ணு
நா. மாணிக்கம்
ப. நாகரேத்தினம்

☆

பொறையார் :
கடைத் தெருவில்
25—8—56 மாலை 6 மணிக்கு
தலைவர் :
இரா. சத்துரு சிங்காரவேல்
பேசுபவர்: ஈ. வெ. கி. சம்பத்

☆

திண்டிவனம் :
தீர்த்தக்குளக்கரை
26—8—56 மாலை 5 மணிக்கு
தலைவர் :
ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ.
பேசுவோர் :
டி. கே. சீனிவாசன்
ஆ. தங்கவேல்
எஸ். நடராசன்

ARUNA

திருமணங்கள்

26—8—56 காலை 9-மணிக்கு, பெரிய காஞ்சீபுரம் யாதவ சத்தி ரத்தில், தோழர் சி. வி. எம். அண்ணாமலை தலைமையில், தோழர் இரா. வெங்கடேசன் —தோழியர் சரசுவதி சீர்திருத் தத் திருமணம் நடைபெறும். அண்ணா அவர்களும், தோழர் கள் காஞ்சி—கல்யாணசுந்தரம் இராம-அரங்கண்ணல், ஈழத் தடிகள் ஆகியவர்களும் வாழ்த் துரை வழங்குவர்.

* * *

26—8—56 காலை 8 மணிக்கு திருக்கழுக்குன்றம் வன்னியர் சத் திரத்தில், தோழர் தி. செ. சபாபதி—தோழியர் ந. இராசாத்தி திருமணம், என். வி. நடராசன் தலைமையில் நடைபெறும்; தோழர் கள் எம். எஸ். ஏ. வகாப், அ. குருசாமி வாழ்த்துரை வழங்குவர்.

* * *

26—8—56 காலை 9 மணிக்கு, திருச்சி குழுமணியில் தோழர் எம் கருப்பண்ணன் தலைமையில் தோழர் முத்துவீரன்—தோழியர் ஆரியமாலை திருமணம் நடை பெறும்; தோழர்கள் எம். எஸ். மணி, வி. கே. முனுசாமி, என். அருணாசலம் ஆகியோர் வாழ்த் துரை வழங்குவர்.

* * *

26—8—56 காலை மணப்பாறை யில், தோழர் வாசுதேவன்— தோழியர் சுலோசனா திருமணம், தோழர் காசிநாதன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் இரா. சு தங்கப்பழம், ஏ எஸ். கணபதி, மதிவாணன் ஆகியோர் வாழ்த் துரை வழங்குவர்.

* * *

26—8—56 காலை 9 மணிக்கு தோழர் ஏ. எல். சி. கிருட்டிண சாமி தலைமையில் சேவூரில் தோழர் கே நடேசன்—தோழியர் ஆர். எல்லம்மாள் திருமணம் நடை பெறும்,

திருக்குறள் வகுப்பு

25—8—56 இரவு 7 மணிக்கு, சென்னை—இராயபுரம் இலக்கிய மன்றச் சார்பில், கல்மண்டபம், நகராண்மைக் கழக ஆண் பள்ளி யில், திரு. அ. ஞானசுந்தரம் அவர் கள், குறளில், 'இல்வாழ்க்கை' எனும் அதிகாரத்திற்குப் பொருள் கூறி விரிவுரையாற்றுவார். மாலை 6-30 மணிக்கு, மன்ற வளர்ச்சிக் கான ஆலோசனைக்குழுக் கூட்டம் நடைபெறும்,

மதுரை மாவட்ட மாணவர்கட்கு :

"26—8—56 காலை 10 மணி யளவில், மதுரை மாவட்ட தி. மு. க.—மாணவர் கிளை யின் புதிய செயற்குழு நகர தி. மு. கழகப் பணிமனையில் கூடவிருக்கிறது. மாணவத் தோழர்கள் அனைவரும் இதையே அழைப்பாகக் கொண்டு கலந்து கொள்ள வேண்டுகிறேன். மதுரை நக ரில் பயிலும் வெளியூர் மாண வர்கள் அனைவரும் தவறாது பங்கு கொள்ள வேண்டுகி றேன்."

என்று, மதுரை மாவட்ட தி. மு. க.—மாணவர் கிளை செயலாளர் தோழர் சாலை—மன்னன் அறி விக்கிறார்.

கடையநல்லூரில் தி.மு.க. மாணவர் கிளை அமைப்பு

27—8—56 மாலை 5 மணிக்கு, தி. மு க.—மாணவர் கிளை அமைப் புக் கூட்டம் கடையநல்லூர் உயர் நிலைப்பள்ளித் திடலில் நடை பெறும். இயக்கப் பற்றுள்ள மாண வர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

பொன்னாடை போர்த்து விழா

26—8—56 மாலை 5 மணிக்கு, கோவை சி. எஸ் டபிள்யூ ஆலை யில் அமைந்துள்ள 'கல்யாண மண்டபத்'தில், டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்து விழா நடைபெறும். திரு. இராசா சர். முத்தையா அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்குவார்; அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள், இராச மாணிக்கனார் அவர்களுக்குப் பொன்னாடைபோர்த்துவார்; பிர முகர்கள் பலர் பாராட்டுரை வழங் குவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக் காக தோழர் இரா. நெடுஞ்செழி யன், எம்.ஏ. அவர்களால் அழ கிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, நாரியாநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகி றது. ஆசிரியர் : இரா. நெடுஞ் செழியன் எம் ஏ.